சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் புதிய வீடுகள் கட்டித் தருதல் – அரசு சாரா மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் புதிய வீடுகள் கட்டப்படாமல் விடுபட்ட வீடுகளைக் கட்டுதல் – திருத்தம்.

---

வருவாய் (இ இ.4) துறை

அரசாணை (நிலை) எண் 684 நாள் – 17.10.06

படிக்கப்பட்டது:

அரசு ஆணை (நிலை) எண் 625, வருவாய் (என்.சி.IV) துறை,
நாள் 20.09.2006.

**ஆணை**

பார்வையில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண் 625, வருவாய் (என்.சி.IV) துறை, நாள் 20.09.2006 -க்கு பின்வரும் திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

**<u>திருத்தங்கள்</u>**

i. பத்தி 1இல் காணப்படும் "ரூ 15 இலட்சம்" என்ற சொற்களுக்குப் பதிலாக ரூ 1.5 இலட்சம் என்ற சொற்கள் மாற்றாகக் கொள்ளப்பட வேண்டும்.

ii. பத்தி 3(அ)ல் காணப்படும் " Rajiv Gandhi Package for Tsunami Relief " என்ற சொற்களுக்குப் பதிலாக " Rajiv Gandhi Rehabilitation Package for Tsunami Affected Areas which has been merged into the Tsunami Rehabilitation Programme" என்ற சொற்கள் மாற்றாகக் கொள்ளப்பட வேண்டும்.

iii. பத்தி 3 (ஆ) - க்குப் பிறகு பின்வரும் பத்தி சேர்க்கப்படுகிறது.
(இ) இவ்வீடுகள் ஊரகப் பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் இயங்கும் சுனாமி மாவட்ட செயலாக்க அலகுகள் (District Implementation Units) மூலமும் நகரப் பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமும் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

iv. பத்தி 3 (இ), (ஈ) மற்றும் (உ) ஆகியவை 'பத்தி 3 (ஈ), (உ) மற்றும் (ஊ) என்று மாற்றியமைக்கப்படுகின்றன.

v. பத்தி 4 ல் காணப்படும் '3 (ஈ) என்பதை 3(உ) என்று படிக்கவும்.

2. இவ்வாணை நிதித்துறை அலுவல் சாரா குறிப்பு எண் 3903/நிசெ/ப்பி/2006, நாள்:14.10.2006 உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி)

**எஸ். ஆதிசேஷய்யா**
அரசு செயலாளர்.